ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 160/28 — 1975 අප්‍රේල් 19 වැනි සෙනසුරාදා — 1975.04.19

160/28 ம இலக்கம்—1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I: தொகுதி (I)—பொது

அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : பபிளியு. 68 (50)/75.

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் முதலமைச்சரின் விதப்புரையின்மேல் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

நுவரெலியா,
1975 ஏப்பிறல் 19.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள், 1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, அவசரகால (நிறுவைகள் அளவைகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (158 ஆம் அத்தியாயமான) நிறுவைகள், அளவைகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளிலும், அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளிலும் எது எப்படியிருப்பினும், இவ்வொழுங்குவிதிகள் பயனுடையவையாதல் வேண்டும்.

3. நிறுவைகள், அளவைகள் பரிசோதகர் எவரும், அல்லது விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர் எவரும்—

(அ) (எதேனும் உள்ளூராதிகாரசபையின் நிருவாக எல்லைகளினுள் உள்ள எதேனும் இடப்பரப்பு உட்பட) இத்தீவிலுள்ள எதேனும் இடத்தில் அல்லது இடப்பரப்பில் எதேனும் வியாபாரத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் எவையேனும் வளவுகளினுள் நுழையவும், வாங்குநரொருவரிடம் பண்டங்களை ஒப்படைக்கும் நோக்கத்துக்காகச் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டுள்ள எதேனும் நிறுத்தலை அல்லது அளத்தலைச் சரிபார்க்கவும்; அத்துடன்,

(ஆ) 1971 இன் 7 ஆம் இலக்கச் சட்டத்தால் நிருத்தப்பட்டவாறான அக்கட்டளைச் சட்டத்தின் 44 ஆ. என்னும் பிரிவின்கீழான தவறொன்று தொடர்பிலான எதேனும் குற்றவழக்குத் தொடுக்கும் நோக்கத்துக்காக, சொல்லப்பட்ட 44 ஆ. என்னும் பிரிவுக்கு முரணாக அவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ள எவையேனும் பண்டங்களை, அவசியமானவிடத்து, கைப்பற்றவும் தடுத்துவைக்கவும், தத்துவமுடையவராயிருத்தல் வேண்டும்.

4. நியமங்கள் முதுகணர், அக்கட்டளைச்சட்டத்தின் கீழான குற்றவழக்கெதுவும் இத்தீவிலுள்ள எப்பாகத்திலும் தொடுக்கப்படுவதற்கென அனுமதியளிப்பதற்குத் தத்துவமுடையவராயிருத்தல் வேண்டும்.

5. இவ்வொழுங்குவிதிகளில்—

"நிறுவைகள், அளவைகள் பரிசோதகர்" என்பது, அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட நிறுவைகள், அளவைகள் பரிசோதகர் எனப் பொருளாகும்.

"உள்ளூராதிகாரசபை" என்பது, மாநகரசபை, நகரசபை, பட்டினசபை, அத்துடன் கிராமச்சபை எனிலும் பொருளாவதோடு அநுராதபுரப் பாதுகாப்புச் சபையையும் உள்ளடக்கும்;

"கட்டளைச் சட்டம்" என்பது, (158 ஆம் அத்தியாயமான) நிறுவைகள், அளவைகள் கட்டளைச் சட்டம் எனப் பொருளாகும்;

"விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்" என்பது, (173 ஆம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட பரிசோதகர் ஒருவர் எனப் பொருளாகும்;

"நியமங்கள் முதுகணர்" என்பது, கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட நியமங்கள் முதுகணர் என்று பொருளாகும் என்பதோடு, பிரதி நியமங்கள் முதுகணரையும் உள்ளடக்கும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.